# பெரியார் பல்கலைக்கழகம், சேலம் - 636 011

## அறிவிக்கை

பெரியார் தொலைநிலைக் கல்வி நிறுவனம் (PRIDE) (தற்போது தொலைநிலை மற்றும் இணையவழிக் கல்வி மையம் (CDOE) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது) மற்றும் பல்கலைக்கழகத் தொழிற்சாலைப் புரிந்துணர்வு திட்டத்தின் (UICP) கீழ் சேர்க்கை பெற்று இளநிலை, முதுநிலை மற்றும் பிற பாடப்பிரிவுகளில் பயின்ற மாணாக்கர்களின் படிப்புக்காலம் முடிந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் நிலுவைத்தாள் வைத்துள்ள மாணாக்கர்கள் தங்களது நிலுவைத்தாள்களுக்குரிய தேர்வினை எழுதுவதற்காக சிறப்புத் தேர்வு (Special Examinations) நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2017 – ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்பு பயின்ற மாணவர்கள் தாங்கள் பயின்ற **பாடத்திட்டத்திலேயே** நிலுவைத்தாள்களுக்குரிய தேர்வுகளை எழுதலாம் என்றும் சிறப்புத் தேர்விற்கு விண்ணப்பிக்கும் மாணாக்கர்கள் வழக்கமான தேர்வுக்கட்டணத்துடன் சிறப்புக் கட்டணமாக (Special Fee) ஒவ்வொரு பாடத்தாளிற்கும் ரூ.2000/– சேர்த்துச் செலுத்த வேண்டும்.

ஏற்கெனவே, சிறப்புத் தேர்வுகளுக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசித் தேதி 15.07.2026 எனக் கால அவகாசம் வழங்கப்பட்டு இருந்தது. தற்போது, சிறப்புத் தேர்விற்கு விண்ணப்பிப்பதற்கான தேதி 28–08–2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆன்லைன் விண்ணப்பங்கள் பல்கலைக்கழக வலைத்தளமான www.periyaruniversity.ac,in – இல் வெளியிடப்பட்டுள்ளது என்றும் இவ்வாய்ப்பினை அனைத்து மாணாக்கர்களும் பயன்படுத்திக்கொள்ளுமாறும் **பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் குழு** தெரிவித்துள்ளது.

**குறிப்பு:** கல்விக்கட்டணம் நிலுவையில்லாச் சான்றிதழ் பெற்ற (No dues ) மாணாக்கர்கள் மட்டுமே இச்சிறப்புத்தேர்வு எழுதுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

Phone: 0427-2345091, Cell: 6385770444, E-mail: coeprideslm@gmail.com
Website: www.periyaruniversity.ac.in

# PERIYAR UNIVERSITY, SALEM – 636 011

## Notification

The Periyar University has proposed to conduct Special Examinations for the Students admitted in Periyar Institute of Distance Education (PRIDE) currently renamed as Centre for Distance and Online Education (CDOE) and University Industrial Collaborative Programme (UICP) who have not completed their course within the stipulated period (i.e. N + 5 years, where "N" denotes duration) of the course. The students who have studied in 2017 and earlier can write their Examinations in their original Syllabus. The Students have to pay the necessary examinations fee along with the Special fee of Rs.2000/- per paper.

Already the last date for applying the special examinations was closed on 15.07.2026. Now, the date for applying the special examination is extended upto 28-08-2026.

Online application for the special Examinations is available in the Periyar University website www.periyaruniversity.ac.in.

The Periyar University Vice Chancellor-Committee has informed the students to utilize this opportunity.

Note: Only students who produce a No Dues Certificate issued by the Director, CDOE (For CDOE students) or the Director, DUIC (For UICP students) will be permitted to appear for the Special Exams.